முருகப்பெருமான் துணை

# மகான் இளையான்குடி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.05.2024,** வியாழக்கிழமை

1. தவசியே ஆறுமுக அரங்கனே
தருமபலம் உலகம் அடைந்திட
அவனியில் அவதாரம் எடுத்து
அன்னதானம் சேவை துவக்கி அருளும்
2. அருளும் ஞானியே உன்பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரமென குரோதி தகரின் திங்கள்
வல்லமைபட மூவாறோர் திகதி குருவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 19 ம் நாள், 02.05.2024, வியாழக்கிழமை)
3. வாரமதில் இளையான்குடி நாயனாரும்
வழங்குவேன் உலகம் நலம்பெற
சோரமில்லா மக்கள் படையை
சுத்த சைவநெறி கொண்டு உருவாக்கும்
4. உருவாக்கும் அரங்கமகா ஞானியின்
உயர்தலைமை மக்கள் எற்று
குருவே என வணங்கி வர
குவலயத்தில் சைவநெறி திளைத்து
5. திளைத்துமே உலகினில் மாற்றம்
தெய்வநெறி வழிகாட்டலாக
பிழையற சமூகமும் மாற்றமாக
பெருந்தன்மை தயவுகலந்த மக்களாய்
6. மக்களாய் தேற்றம் உருவாகி
மண்ணுலகில் தருமசாலை பெருகும்
தேக்கமின்றி தருமங்கள் வளரும்
தேசிகன் ஞான உபதேசம் வகை
7. வகைதனில் தவதரும பலமாக
வளர்ச்சி கண்டு இனிதே
பகை வஞ்சம் சூழ்ச்சியான
பாதகமான தீவினைகள் யாவும் விலகி

8. விலகியே சமூக அக்கறை மிகுந்த
வினவிட ஞானவான்கள் படைகளாக
உலகை மாற்றும் சக்திகளாக
உருவாகி அரங்கனால் தேறுவர்

9. தேறவே கலியுக ஞான சபை
தேசிகன் வாழும் பிரணவ சபை
அறம் மிகுந்த சரவண சபை
அரங்கமகானின் தரும சபை

10. சபைதனை உலகோர் நாடி
சரணாகதி கொண்டு வருக
அபயமென தொடர்ந்து வர
அகிலத்தார்கள் அனைவரும் உலகில்

11. உலகில் ஞானத் தலைமைதனை
உருவாக்கும் ஞானம் கூடி
உலகம் தன்னில் ஞான ஆட்சி படைப்பர்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—